**அரச மரக் கூட்டுத்தாபனம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் உள்ளடங்கலாக 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

---

## 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு

---

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல்

போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமத்துடன் தொடர்புடனான இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 ஆம் இலக்க 32 ஆவது பிரிவின் பிரகாரம் வேறு கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் முற்பணங்கள், பணத்திற்கு விற்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் பண விற்பனைக் கட்டுப்பாட்டு ஆகிய 03 கணக்குகளின் மொத்தம் ரூபா 175,064,509 வரவு மீதி எதிரீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கடன்கொடுத்தோர் மீதிகள் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டின் போது Cash sale advance கணக்கொன்று திறக்கப்பட்டு முற்பண பெறுவனவுகள் கணக்கீடு செய்யப்படட்ட போதிலும் முன்னைய ஆண்டுகளில் தீர்வு செய்யப்படாத முற்பணத் தொகை மீதிகள் புதிய கணக்கிற்கு உள்ளடக்காமையால் 2016 ஆம் ஆண்டின் பின்னர் முன்னைய ஆண்டுகளின் பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட காசு முற்பணத்தை தீர்வுசெய்யும் போது Cash sale advance கணக்கிற்கு வரவு பதிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 ஆம் இலக்க 61 ஆவது பிரிவின் பிரகாரம் சொத்தொன்றிற்காக பாவனைக்குட்படுத்தும் பெறுமானத்தேய்வு முறை குறைந்த பட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் சொத்துக்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் சொத்தின் எதிர்கால பொருளாதார பலனை உபயோகிக்கும் எதிர்பார்ப்புடன் தேவையான மாற்றங்கள் ஏற்படுமாக இருந்தால் அந்த மாற்றங்களின் வடிவம் வெளிப்படுத்தும் வகையில் பெறுமானத்தேய்வு முறை மாற்றப்பட வேண்டும். அப்படியான மாற்றம் கணக்கீட்டு மதிப்பீட்டுக்கான மாற்றமாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் | கூட்டுத்தாபனத்தால் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கும் படியான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு கொள்கை மற்றும் சதவீதம் தீர்மானிக்கப்படுவது, விசேட நிபுணத்துவமுள்ளவரின் அபிப்பிராயம் மற்றும் சொத்தின் பயன்படு ஆயுட்காலம் என்பவற்றினைக் கருத்திற் கொண்டேயாகும் திறைசேரியின் செயலாளரினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2018/04 ஆம் இலக்க சொத்துக்களின் முகாமைத்துவ சுற்றறிக்கையின் படி மற்றும் கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் காரியாலயத்தினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பீடு செய்தல் வழிகாட்டலின் பிரகாரம 2019 ஆம் ஆண்டின் கூட்டுத்தாபனத்தின் அனைத்து சொத்துக்களையும் மீள் மதிப்பிடுவதற்கு தேவையான | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 08 இன் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த செயற்பாடுகள் நிறைவடைந்த பின்னர் பெறுமானத்தேய்வு முறை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக அறியத்தருகின்றேன். | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 ஆம் இலக்க 79 ஆவது பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை பயன்படுத்துவோரின் தேவைக்கு ஏற்ப பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | -மேற்படி - |
| (i) | தற்காலிகமாக செயலற்ற சொத்துக்கள், இயந்திர தொகுதி மற்றும் உபகரணங்களின் முகப்பு மதிப்பீடு | திறைசேரி செயலாளரினால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இல 2018/04 இன் படி மற்றும் கொம்பட்ரோலர் நாயகத்தின் காரியாலயத்தினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பிடுதல் வழிகாட்டலின் படி 2019 ஆம் ஆண்டின் கூட்டுத்தாபனத்தினுடைய அனைத்து சொத்துக்களையும் மீண்டும் மதிப்பிடுவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த காரியங்கள் நிறைவடைந்ததன் பின்னர் தற்காலிகமாக செயலற்ற சொத்துக்களை அழிப்பதற்கோ அல்லது திருத்தங்களை மேற்கொண்டு பாவனைக்குட்படுத்த முடியுமாக இருந்தால் மீள மதிப்பீடு செய்வதற்கு இனிவரும் காலங்களில் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன். | - மேற்படி - |
| (ii) | இலங்கை கணக்கீட்டு நியமம் 05 ஆம் இலக்கத்தின் பிரகாரம் பயன்படுத்தும் நிலையிலிருந்து ஓய்வளிக்கப்பட்டுள்ள மற்றும் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பெறுமானத்தேய்வு முறைப்படுத்தப்படாத | வருடத்திற்குள் கைதவிர்க்கப்பட வேண்டிய சொத்துக்களை அடையாளம் கண்டு அந்த வருடத்திற்குள் அழிக்கப்பட வேண்டும். அப்படி அழிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் சம்பந்தமாக சொத்துக்கள், இயந்திர தொகுதி மற்றும் உபகரணங்கள் சம்பந்தமாக குறிப்பு இலக்கம் 08 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள், இயந்திரங்கள் தொகுதி மற்றும் உபகரணங்களின் முகப்பு மதிப்பீடு | | |
| (iii) | கிரயப் மாதிரிப் படிவத்தை பாவனைக்குட்படுத்தும் போது ஆதனங்கள் இயந்திர தொகுதி மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி முகப்பு பெறுமதியிலிருந்து பொருண்மையான அளவில் வேறுபடும் போது நியாயமான பெறுமதி | கூட்டுத்தாபனத்திற்குரிய முழுமையாக தேய்வுக்குட்பட்ட ஆதனங்கள், இயந்திர தொகுதி மற்றும் உபகரணங்களின் பாவனை மதிப்பீடு குறிப்பு இலக்கம் 08 இனால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. திறைசேரி செயலாளரினால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இல 2018/04 இன் பிரகாரம் மற்றும் கொம்ட்ரோலர் நாயகத்தின் காரியாலயத்தினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பிடுதல் வழிகாட்டலின் படி 2019 ஆம் ஆண்டின் கூட்டுத்தாபனத்தினுடைய அனைத்து சொத்துக்களையும் மீண்டும் மதிப்பிடுவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி இதன்பின்னர் இந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்து பாவனை மதிப்பீட்டில் போதியளவு மாற்றங்களுக்கு உட்படும்போது சாதாரண பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றேன். | மேற்படி - |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் அலுவலகத்தை அமைப்பதற்காக ரூபா 2,443,620 செலவிடப்பட்டிருந்ததுடன், இச்செயற்பாட்டிற்காக 2018 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தினால் ரூபா 2,633,032 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. இக்கொடுக்கல் வாங்கலை சரியாக கணக்கீடு செய்யாமல் வேறாக கிடைக்க | ESCAMP செயற்திட்டத்திலிருந்து கிடைத்த ரூபா 2,633,032 தொகை கடன்பட்டோரால் வைப்புச் செய்யப்பட்ட தொகையாக 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதி சீராக்கப்பட்டு ESCAMP செயற்திட்ட கணக்கிற்கு தற்போது மாற்றப்பட்டுள்ளதுடன் | சரியான கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் இடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 5,671,845 என காண்பிக்கப்பட்டிருந்த போதும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 5,028,177 ஆக இருந்தமையால் ரூபா 643,668 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ESCAMP செயற்திட்ட கணக்கு மீதி தற்போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 5,671,845 பெறுமதி தற்போது ESCAMP செயற்திட்டம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புதிய மீதி ரூபா 4,343,153 ஆக இருந்தது. | |
| (ஆ) | சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற் திட்டத்திலிருந்து அறவிட வேண்டிய கட்டிட வாடகை, மின்சாரப் பட்டியல், நீர்ப் பட்டியல் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 552,291 மற்றும் ரூபா 38,608 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தின் கூட்டுத்தாபனத்திற்கு அறவிட்ட ரூபா 575,198 ஆன பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி கூட்டுத்தாபனத்தின் வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யும் போது சகல தவறுகளும் இனங்காணப்பட்டு சீராக்கப்பட்டு ESCAMP செயற்திட்ட கணக்கில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய பணம் சரியாக துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் கம்பனி ஒன்றிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,873,954 தொகை 36 வருடங்களாக கிடைக்க வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது. இத்தொகையை பதிவழிப்பதற்காக 2012 செப்தம்பர் 06 ஆந் திகதி அப்போதய சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்ற சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை பொறுப்பேற்றல் | இந்த ரூபா 11,873,954 தொகையை பதிவழிப்பதற்கு இதற்கு முன்னரும் பல தடவை பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. பொது திறைசேரிக்கு கடிதம் அனுப்பிய போதும் இலங்கையின் அந்நிறுவனம் செயற்படவில்லை என்பதால் இது செயற்பட முடியாமல் இருந்தது. | இத்தொகையை அறவிடுவதற்கு முடியாவிட்டால் அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | டம்பெற்றிருக்கவில்லை. மேலும் ரூபா 1,687,042 தொகை 04 ஆண்டுகளாக கிடைக்க வேண்டிய மீதியொன்றாக இருப்பதுடன் மீளாய்வாண்டில் எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கிவல்லை. 2020 ஆம் ஆண்டில் ரூபா 108,670 அறவிடப்பட்டிருந்தது. | எவ்வாறாயினும், இது தொடர்பான பணிப்பாளர் சபைக்கு விடயங்களை தொடர்ந்தும் முன்வைப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். தனியார் நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய (GMIC) ரூபா 1,687,042 தொகை நிராகரிக்கப்பட்ட சிலிப்பர்களுக்கான தொகையாக இருந்ததுடன் இதில் ரூபா 108,669 தொகை இவ்வாண்டில் அறவிடப்பட்டுள்ளது. பிரதி பொது முகாமையாளர் (இயக்கம்) இனால் இத்தொகையை அறவிட முடியுமென குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்கு தனிப்பட்ட அடிப்படையில் பலகைகள் மற்றும் தளபாடங்களை கடனுக்கு விற்பனை செய்ய முடியாது எனினும், இதற்கு புறம்பாக முன்னால் தலைவருக்கு 06 ஆண்டுகளுக்கு முன்னர் ரூபா 426,954 ஆன பலகைகள் மற்றும் தளபாடங்கள் வழங்கப்பட்டிருந்தன. அப்பெறுமதியை அறவிடுவதற்காக கூட்டுத்தாபனம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. | தனியார் தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 777,103 தொகை முன்னால் தலைவர் எஸ்.அமரசிங்க அவர்களுக்குரிய ரூபா 426,954 தொகைக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கூட்டுத்தாபனத்தின் கொள்கைகளுடன் இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அறவிடுவதற்குள்ள பணத்தை சட்ட ரீதியாக அறவிடுவதாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வன பாதுகாப்பு திணைக்களத்திலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை கட்டிட பயன்பாட்டிற்காக வாடகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2014 முதல் 2019 ஆம் ஆண்டு வரை உடன்படிக்கையொன்ற இல்லாமை மற்றும் ஏனைய விடயங்களின் பேரில் வாடகை கொடுப்பனவு | 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் 07 வருடங்கள் தொடர்ச்சியாக அரச விலை மதிப்பீட்டாளரால் வழங்கப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வனப் பாதுகாப்பு திணைக்களம் தொடர்ந்து எமக்கு அடிப்படை வாடகை கொடுப்பனவு செய்துள்ளது. 2014 ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் | சட்டரீதியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான எழுத்து மூல சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்படாமையால் ரூபா 39,600,000 தொகை பெற வேண்டிய தொகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | எழுத்து மூல உடன்படிக்கை ஒன்றில்லை என குறிப்பிட்டு கட்டிட வாடகை கொடுப்பனவுகளை நிராகரித்திருந்தனர். எவ்வாறாயினும், எமது சட்டப் பிரிவினால் உடன்படிக்கை வரைவாக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதும், இதுவரை அது தொடர்பாக இணக்கப்பாட்டை தெரிவித்திருக்கவில்லை. இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு எம்மால் விடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. அதன் போது பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் வனப் பாதுகாப்பு பணிப்பாளர், நாயகத்தினால் எமக்கு கட்டிட வாடகையை வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார். அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கட்டிடம் ஒன்றாக இருப்பதால் இக்கட்டிடத்தை வாடகை தொடர்ந்து கிடைக்க வேண்டிய மீதியொன்றாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |

### 1.6.2 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் வன பரிபாலனத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய இறை வாடகை தொகை ரூபா 324,433,735 ஆக இருந்த போதும், வன பாதுகாப்புத் திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் அது ரூபா 52,645,490 ஆக இருந்தமையால் ரூபா 271,788,245 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | 2011 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வன பரிபாலனத் திணைக்களத்திற்கு கூட்டுத்தாபனத்திலிருந்து இறை வாடகை கொடுப்பனவு செய்வதற்கு இணங்கிய மீதிகள் அந்தந்த ஆண்டுகளில் எஞ்சியுள்ளது. இது தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு | இரண்டு நிறுவனங்களுடன் கலந்துரையாடி கணக்குகள் இணக்கக் கூற்று மூலம் சரியாக கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வருவதாக கலந்துரையாடல் இன்னும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக காணப்படுவதுடன் அது முடிவடைந்தவுடன் இம்மீதி கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு அல்லது கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் கருத்திற் கொள்ளவும் அவ்வாறே 2019 ஆம் ஆண்டிற்குரியதாக வன பரிபாலனத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொண்ட அனைத்து மரப்பலகை களுக்காக உயர்ந்த அடிப்படையில் கொடுப்பனவு செய்ய வேண்டிய இறை வாடகைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றிற்கு இணங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 104 | மரக் களஞ்சியத்தின் இருப்பு பரிசேதனை அறிக்கையின் பிரகாரம் ரூபா 348,597 தொகையான 07 இருப்பு உருப்படிகளில் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. அதற்குரிய நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணககாய்வு பிரிவிடம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் உரிய வர்களிடமிருந்து நட்டத்தை அறவிடுவதாக தயவுடன் அறிய தரகின்றேன் | இருப்புக் கட்டுப்பாடு தொடர்பாக முறையான மதிப்பீடு பேணப்பட வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 571(2) | 2 வருடங்கள் கடந்த கேள்வி வைப்புக்கள், பாதுகாப்பு வைப்புக்கள், நிறுத்தி வைத்தல்கள் மற்றம் கேன் கெயில் வைப்புக்கள் முறையாக ரூபா 1,359,260 தொகை, | கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள போதும் குறித்த தரப்பினர் இதுவரை முன்வரவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்காள்ளப்பட வேண்டும் என்பதாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 5,712,626 தொகை, ரூபா 3,044,410 மற்றும் ரூபா 196,570 தொகை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 11 ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு முரணாக கூட்டுத்தாபனத் தலைவருக்கு உதவியாளராக இரண்டு மதியுரையாளர்கள் மற்றும் சாரதி ஒருவர் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் மதியுரையாளருக்கு ஒரு நாளைக்கு ரூபா 2,850 வீதம் படியொன்று 2019 பெப்ரவரி முதல் 2019 செப்தம்பர் 03 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 270 நாட்களுக்கு ரூபா 769,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந்த ஆட்சேர்ப்பு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. இது தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் கோரியுள்ளதுடன் இதுவரை பதில் கிடைக்கவில்லை. தலைவரின் இராஜனாமாவின் பின்னர் உரிய நாளாந்த அடிப்பபை சேவை பெற்றுக்கொள்ளலும் நிறைவு பெற்றுள்ளதாக அறிய தருகின்றேன் | கொடுக்கல் வாங்கல்கள் மற்றம் நிர்வாக செயற்பாடுகள் சட்டரீதியாக மேற்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 512,947,283 இலாபமாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா 672,432,854 ஆக காணப்பட்டது. அதன்படி நிதி விளைவுகளிலே ரூபா 159,485,571 ஆன வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விற்பனை கிரயம் 13 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி வருமானம் 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை மற்றும் நிதிச்செலவினம் ரூபா 227 மில்லியனால் அதாவது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 100 சதவீதத்தினால் அதிகரித்தமை பிரதான காரணமாக காணப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கிடையே விவசாய உற்பத்திகள், பிரம்பு இறக்குமதி ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. அத்ததுடன் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் மர உப பொருள் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனைகள் இடம்பெற்றிருக்கவில்லை. மீளாய்வாண்டிலே புகையிரத வீதி சிலிப்பர் கட்டைகள் பலகை ஏற்றுமதி இடம்பெற்றிருக்கவில்லை. அத்துடன் பலகை தொடர்பான முடிவடைந்த மற்றும் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்தல் கூட்டுத்தாபனத்தின் நோக்கமாக இருந்தாலும் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களுக்கான பகுப்பாய்வு**

கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னைய இலாபம் முன்னைய ஆண்டிற்கு நிகராக ரூபா 109,485,571 ஆல் குறைந்திருந்ததுடன் அது 19 சதவீத பின்னடைவாகும். இதற்காக விற்பனை வருமானம் ரூபா 213,160,673 ஆலும் அதாவது 5.2 சதவீதத்தினால் அதிகரித்த போதும் விற்பனைக் கிரயம் 13 சதவீதத்தினால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**2.3 விகித பகுப்பாய்வு**

மீளாய்வாண்டிலே திரவத்தன்மையிலான விகிதத்தை கவனத்திற்கொள்ளும் போது நடைமுறை விகிதாசாரம் 1:4.8 ஆகவும் மற்றும் விரைவு விகிதம் 1:3.02 ஆன உயர் பெறுமதியொன்றை எடுத்திருந்ததால் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமைகள் மிக நல்ல நிலையில் காணப்பட்டது. இருப்பினும் கடன் விற்பனை விகிதம் 2018 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 1.00 முதல் 0.77 வரை 0.23 ஆல் இருப்பு குறைவடைந்திருந்ததுடன் கடன் சேகரிப்புக் காலம் 362 நாட்கள் முதல் 472 வரை அதிகரித்திருந்தது. இதன் பிரகாரம் கடன் சேகரிப்புக் காலம் அதிகரித்தமையால் காசுப்பாய்ச்சலில் கடன் முகாமைத்துவம் பலவீனமான மட்டத்தில் இருப்பதாக அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் போது மின்னேரியா பிரதேச செயலகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஹல்மில்லவ 03/006 வேலைத்தளத்தில் வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த 7,840 தேக்கு மரங்களை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கும் போது அதில் 69 (358,890 dm2) மரங்கள் காணாமல் போனமை காரணமாக ரூபா 2,994,536 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. | முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனையொன்று 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் போது ஒழுக்காற்று உத்தியோகத்தரால் குற்றவாளிக்கு எச்சரிக்கை விடுக்குமாறும் பின்னர் ஓட்டத்தை அறவிட்டு பணத்தை செலுத்துமாறும் குற்றவாளிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக குற்றவாளியால் முன்வைக்கப்பட்ட மேன்முறையீடு, பணிப்பாளர் சபையினால் நிராகரிக்கப்பட்டு நட்டத்தை கொடுப்பனவு செய்வதற்கு அறிவிக்குமாறு வழங்கிய ஆலோசனையின் பிரகாரம் பணத்தை செலுத்துமாறு குற்றவாளிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்நட்டத்தை தொடர்ச்சியாக கொடுப்பனவு செய்யாமல் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளதால் ஓட்டத்தை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இது தொடர்பாக மீண்டும் பணிப்பாளர் | நிர்வாகம் மற்றும் செயற்திறனாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சபைக்கு அனுப்புமாறு ஒழுக்காற்று உத்தியோகத்தரால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பேரில் மீண்டும் பணிப்பாளர் சபைக்கு மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் போது கிடைத்த ஆலோசனையின் பிரகாரம் முறையான ஒழுக்காற்று பரிசோதனையில் குற்றவாளியாக்கப்பட்டால் ஒழுக்காற்று கட்டணங்களை அறவிடுவதாக இணங்கி மீண்டும் ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பூஸ்ஸ தளபாடங்கள் தொகுதியினால் 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 06 ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 13,779,350 ஆன முற்பணங்களை தீர்வு செய்வதற்கு போதியளவு பெறுமானத்தை உடைய தளபாடங்களை உற்பத்தி செய்வதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. மேலும் முற்பணத்தை வழங்கும் போது ஒப்பந்த தொகையின் 54.4 முதல் 80.2 வரை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. இது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவிற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பூஸ்ஸ பிரிவின் தளபாட உற்பத்தி செயற்பாடுகளுக்காக வெளிவாரியாக தச்சு தொழில்நுட்பவியாலாளர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் தளபாட உற்பத்திகளை மேற்கொள்கின்றனர். அவர்களால் செய்யப்படும் வேலைப் பகுதிகளை கருத்திற் கொண்டு முற்பணம் வழங்கப்படுகின்றது. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் வழங்கப்படும் முற்பணத் தொகையே முற்பணமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களால் செய்யப்பட்ட வேலைப்பகுதியின் பிரகாரம் ஏதேனும், சதவீதமொன்று முற்பணமாக வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் ரூபா 11,975,500 முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் இதுவரை எஞ்சியுள்ள மீதி ரூபா 7,579,500 தொகை ஆக இருந்தது. செலுத்தப்படும் முற்பணத் தொகைக்கு போதியளவில் தளபாட உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையில் தளபாட உற்பத்தியை பூர்த்தி செய்வதற்கு முடியுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | வழங்கப்படும் முற்பணத்தை தீர்வு செய்வதற்கோ அல்லது அதற்குரிய தளபாடங்களை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 சனவரி முதல் 2019 திசெம்பர் 17 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் பூஸ்ஸ தளபாட தொகுதியின் உற்பத்தி செய்யப்படும் 88 சதவீதம் ஒப்பந்த அடிப்படையில் வெளிவாரி ஒப்பந்தக்காரர்களை கொண்டு நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் 12 சதவீதம் மாத்திரம் கூட்டுத்தாபன ஊழியர்களை கொண்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் தளபாட தொகுதியில் சேவை புரிந்த ஊழியர்களுக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 10,855,909 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கூட்டுத்தாபன ஊழியர்களின் உற்பத்தி செயற்பாடுகளுக்கான பங்களிப்பு குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அவர்களின் சம்பளப் படிகள் உட்பட செலவினம் உற்பத்தி கிரயத்திற்கு சேர்க்கப்படுவதால் கூட்டுத்தாபனத்தின் பொருட்களின் விலை தீர்மானிக்கப்படும் போது கூடிய விலையொன்று தீர்மானிக்க நேர்வதாக அவதானிக்கப்பட்டது. | பூஸ்ஸ தொகுதியின் கூட்டுத்தாபனத்தின் 08 தச்சர்கள் மாத்திரம் சேவை புரிகின்றனர். அவர்களின் அநேகமானோர் அதிக திறமையுள்ள தச்சர்கள் அல்லாமல் இருப்பதுடன் அவர்களினால் சேவைகள் செயற்திறனாக மேற்கொள்ளப்படுவதில்லை. மேலும், அவர்கள் கடமை நேரத்தில் மாத்திரம் சேவை புரிவதுடன் மேலதிக நேர வேலை மேற்கொள்ளப்படு வதில்லை. இதனால் அவர்களின் சேவைக்காலம் நாளொன்றுக்கு 07 மணித்தியாலங்கள் ஆகும். ஒப்பந்த சேவையாளர்கள் 12-16 மணித்தியால அளவான காலமொன்றாக உற்பத்தி செயற்பாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களில் அதிக திறமைகளையுடைய தச்சு தொழிலாளர்களாகும். மேலும், கூட்டுத்தாபன ஊழியர்கள் மாதிரி உற்பத்தி நடவடிக்கை மற்றும் கொள்வனவாளர்களிடமிருந்து கிடைக்கும் உருப்படி 1, 2 போன்ற தளபாட கட்டளைகளை கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆதலால் அவற்றை மேற்கொள்ளும் போது கூடுதலான காலமொன்று எடுக்கப்படுகின்றது. கூட்டுத்தாபன ஊழியர்களின் உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபடுவதால் ஒப்பந்தக்காரர்களின் உற்பத்திக்காக அறவிடப்படும் கூலி கட்டுப்படுத்தப் பட்டுள்ளதுடன் அவர்கள் கூடுதலான தொகையொன்று கேட்கப்படும் சந்தர்ப்பங்கள் கூட்டுத்தாபன ஊழியர்களின் அந்த உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுவதால் விலை கட்டுப்பாடொன்று இடம் பெற்றுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக செயற்பாடுகளை முறையாக பேணி கூட்டுத்தாபனத்தை சாதகமான மட்டத்தில் நடாத்திச் செல்லல் வேண்டும். |
| (இ) | பூஸ்ஸ மர தொழிற்சாலைக்கு கிடைக்கப் பெற்றிருந்த உற்பத்தி கட்டளைகளில் 93 சதவீதமான அளவொன்று அரச நிறுவனங்களிலிருந்து கிடைத்திருந்ததுடன் தனியார் துறையிடமிருந்து 7 சதவீதத்திற்கு குறைந்த | பூஸ்ஸ காட்சியகத்தில் உள்ள கட்டளை பதிவேட்டினை பரீட்சித்த போது 2019 ஆம் ஆண்டில் அரசின் கட்டளைகள் 53 சதவீதமும் தனியார் கட்டளை 47 சதவீதமாகவும் இருந்தன. இதன்படி அரச நிறுவனங்களைப் போன்றே தனியார் துறையினரும் | தொகுதியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக செயற்பாடுகளை முறையாக பேணி கூட்டுத்தாபனத்தை சாதகமான |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதமொன்று கிடைத்திருந்தது. தனியார் துறையின் கேள்வியை அதிகரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மரக் கூட்டுத்தாபனத்தின் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு விருப்பமுள்ளதாக காணப்படுகின்றது. | மட்டத்தில் நடாத்திச் செல்லல் வேண்டும். |
| (ஈ) | பூஸ்ஸ காட்சியகத்தில் நடாத்தப்பட்ட விலை குறைப்பு கண்காட்சிக்கு ரூபா 1,690,183 தொகையான சந்தை பெறுமதியான பொருட்கள் 50 சதவீதத்தை விட விலை குறைக்கப்பட்டு ரூபா 707,710 விலை குறைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு இழக்கப்பட்ட இலாபம் 982,473 இருந்தது. | 2019 மே 21 ஆந் திகதி பிரதி STC/M/.2.FOR B.S ஆம் இலக் கடிதத்தின் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பிரகாரம் தவறுகளுடன் கூடிய பொருட்கள் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னராக இருக்க வேண்டியதாக அறிக்கை கோரப்பட்டிருந்ததுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பின்னர் பொருட்களை பரீட்சிப்பதற்காகவும் குறைகளின் பிரகாரம் விலைகளை தீர்மானிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அட்டவணைப்படுத்தப்பட்ட சகல பொருட்களையும் அக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் குறைகளின் பிரகாரம் ஒப்பிட்டு விலையொன்று குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றது. அக்குழு அறிக்கை தலைமை அலுவலகத்தின் விலை குழுவிற்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன் விலை குழு மூலம் அத்தவறுகளுடன் கூடிய பொருட்கள் பட்டியலின் விலைகள் அனுமதிக்கப்பட்டு விற்பனைக்காக நவம்பர், திசெம்பர் மாதங்களில் விற்பனை செய்யப்பட்டன. உரிய காலம் கடந்த சுற்றாடல் நிலைமையில் தவறுகளுடன் கூடிய இருப்புக்கள் மேலும் களஞ்சியத்தில் காணப்பட்டால் அத்தளபாடங்களை அவ்விலைக்கோ விற்பனை செய்ய முடியாமல் இருக்கும். | - மேற்படி - |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு தொழிற்சாலையிலிருந்து களஞ்சியத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 14,901,048 பெறுமதியான | தளபாடங்கள் மொத்தமாக உற்பத்தி செய்யப்பட்ட போதும் காட்சியகத்திலிருந்து கிடைக்கும் கட்டளைகளின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டு காட்சியகங்களுக்கு வழங்கப்படுகின்றன. (சகல | உரிய காலங்களில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தளபாட இருப்பொன்று களஞ்சியத்தில் நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டமையால் விற்பனை செய்வதற்கு பொருத்தமற்ற நிலைக்கு உட்பட்டிருந்தது. | இருப்புக்களும் ஒரே தடவையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் நிறம் மாறியிருப்பதால்) உதாரணமாக STB/310 சாப்பாட்டு மேசை கதிரைகள் கணக்காய்வு சந்தர்ப்பம் வரை 80 ஆக இருந்ததுடன் தற்போது 12 மாத்திரமே எஞ்சியிருந்தன. STCB/110 A 18 கண்ணாடி மேசைகள் கணக்காய்வு சந்தர்ப்பம் வரை இருப்பாக இருந்த போதும் தற்போது இருப்பில் எதுவும் எஞ்சியிருக்கவில்லை. காட்சிக் கூடங்களிலிருந்து கிடைக்கும் கட்டளைகளின் பிரகாரம் பூர்த்தி செய்யப்படுகின்றன. இதற்காக STCB/145A (மருதம்) செட் தற்போது இருப்பு முடிவடைந்துள்ளது. | |
| (ஆ) | களஞ்சியத்தில் ரூபா 10,512,116 பெறுமதியான தளபாடங்கள் இருக்கையில் அவற்றை விற்பனைக்கு பொருத்தமான நிலைக்கு உட்படுத்தாமல் அத்தளபாட உருப்படிகளை புதிதாக உற்பத்தி செய்வதற்கு புதிய உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு தளபாடங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உப பாகங்கள் தயாரிக்கப்பட்டு பொருத்தப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ள தளபாடங்கள் பூர்த்தி செய்வதற்கு போதியளவு கூட்டுத்தாபன ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் பற்றாக்குறையாக இருப்பது இதற்கான காரணமாகும். மேலும், பூர்த்தி செய்வதற்கு கொடுப்பனவு செய்யப்படும் கூலி அடிப்படையில் ஒப்பந்தக்காரர்கள் முன் வராமையே இதற்கான காரணமாகும். இதன் பிரகாரம் முறையான பூசல் இடப்படாத தளபாடங்கள் நீண்ட காலமாக களஞ்சியத்தில் வைத்திருப்பதற்கு நேர்கின்றது. எனினும், காட்சியகத்திற்கு கிடைக்கும் கட்டளைகளின் பிரகாரம் பூசப்பட்டு விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகின்றேன். | தொகுதியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக செயற்பாடுகளை முறையாக பேணி கூட்டுத்தாபனத்தை சாதகமான மட்டத்தில் நடாத்திச் செல்லல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உற்பத்தி செய்யப்படுகின்ற தளபாடங்கள் நடைமுறையொன்று இல்லாமலும் பாதுகாப்பற்ற வகையிலும் களஞ்சியத்தில் ஆங்காங்கே குவித்து வைக்கப்பட்டிருந்தன. இதனால் தளபாடங்களை தெரிவு செய்வதற்கு முடியாமல் இருப்பதுடன் பழுதடைந்தும் காணப்பட்டன. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | களஞ்சிய நிர்வாக செயற்பாடுகள் முறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | வெளிவாரி ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களால் உற்பத்தி செய்யப்பட்ட தளபாட உற்பத்திகளை களஞ்சியத்திற்கு பொறுப்பேற்பதற்கு முன்னர் அத்தளபாடங்கள் நியமங்களின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டதா என காட்சியக தரப் பரிசோதனையாளரால் பரீட்சிக்கப்பட வேண்டிய போதும், அவ்வாறு செய்யப்பட்டமைக்கான தகவல்கள் காணப்படவில்லை. தெரிவு பரிசோதனையின் போது சில தளபாடங்களில் குறைபாடுகள் உள்ளதாக அவதானிக்கப்பட்டது. | வெளியக ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களால் உற்பத்தி செய்யப்படும் தளபாடங்களின் தரத்தினை பரீட்சிப்பதற்காக தளபாட தொழிற்சாலைகளில் உதவி முகாமையாளர் (தரப் பரிசோதனை) மற்றும் பிரதி முகாமையாளர் (தரப் பரிசோதனை) பதவிகள் வழங்கப்பட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களால் தர ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு அப்பொருட்கள் காட்சியகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் சில பொருட்கள் காட்சிசாலையில் இருக்கும் போது இடைவெளி மற்றும் கீறல்கள் போன்றவை நேரக்கூடும். சில பொருட்கள் ஒரே இடத்தில் வைக்கப்படுவதால் நிறம் மாறக்கூடியதாகவும் உள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மீண்டும் அப்பொருட்கள் திருத்தி விற்பனை செய்யப்படுகின்றது. | தொகுதியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக செயற்பாடுகளை முறையாக பேணி கூட்டுத்தாபனத்தை சாதகமான மட்டத்தில் நடாத்திச் செல்லல் வேண்டும். |
| (உ) | பூஸ்ஸ மரக் களஞ்சிய வளவில் காணப்படும் ரூபா 47 மில்லியனை கருங்காலி கட்டை டெ.மீ 225,994 அளவு 2007 ஆம் ஆண்டிலிருந்து அதாவது 12 வருடடங்கள் களஞ்சிய வளவில் பாதுகாப்பற்ற வகையில் குவித்து | பூஸ்ஸ களஞ்சியத்தின் தற்போது 225 க.மீ கருங்காலி கட்டைகள் அளவில் காணப்படுகின்றன. ஆலோசனையின் பிரகாரம் கட்டைகளில் உள்ள பழுதுகளின் பிரகாரம் கட்டைகளை வெட்டி பயன்பாட்டிற்கு எடுக்கக்கூய கட்டைகளை இருப்பிற்கு | களஞ்சிய நிர்வாக நடவக்கைகள் முறைப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| வைக்கப்பட்டிருந்ததுடன் பல்வேறு சுற்றாடல் பாதிப்புக்குள்ளாகியும் சிதைவடைந்து காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | எடுத்து குறைகளுடன் கூடிய கட்டளைகளை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பிற்கு எடுத்த கட்டைகளை அடுக்கி வைத்து பொலித்தீன் மேவுகையொன்று இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கட்டைகள் மற்றும் ஏனைய கட்டைகளின் பாதுகாப்பிற்காக கட்டை பிரிவின் காவல் கூடமொன்று அமைக்கப்பட்டு 24 மணித்தியாலங்கள் பூராகவும் கட்டை பிரிவில் பாதுகாப்பு காப்பாளர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். அவ்வாறே பிரதி பொது முகாமையாளரின் (உற்பத்தி மற்றும் தொழில்நுட்பம்) ஆலோசனையின் பேரில் B பிரிவின் பதிலின் பிரகாரம் உயரம் குறைந்த பகுதிக்காக கம்பி வேலியொன்று நிர்மாணிக்கும் செயற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. | |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனத்தினால் சம்பத்பாய கட்டிடத் திருத்தம் மற்றும் நவீனமயப்படுத்தலுக்கான தயாரிக்கப்பட்டிருந்த மொத்த கிரய மதிப்பீடு மற்றும் பெறுகை வழங்கப்பட்ட நிறுவனத்தின் விலைகளுக்கு இடையே பாரிய விலகல் ஒன்று காணப்பட்டதுடன் அது 25.44 சதவீதமான கூடுதலாக இருந்தது. 2019 யூலை 26 ஆந் திகதி சமர்ப்பித்த பட்டியல்களின் 15 சதவீத விலை அதிகரிக்கப்பட்டதால் ஒப்பந்தத்தின் விலை மேலும் அதிகரித்திருப்பதாக | விலை மதிப்பீட்டை விட குறைந்த விலைக்கு ஒப்பந்தம் சமர்ப்பிக்கப் பட்டமையால் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலை அடிப்படையில் அவ்விடயத்தை நிறைவேற்றுவதற்கு இயலுமை உள்ளதாக அந்நிறுவனம் அறிவித்திருந்தமையால் ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டது. நடைமுறை சிக்கல் காரணமாக உரிய காலப்பகுதியில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய முடியாமையால் சந்தை விலை விலகல் | பெறுகை வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கவனத்தில் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் மதிப்பீடு மற்றும் பெறுகை மதிப்பீடு முறையாக மேற்கொள்ளப் படவில்லையென அவதானிக்கப்பட்டது. | அடிப்படையில் ஒப்பந்த நிறுவனம் மேலதிகமாக 15 சதவீத விலை அதிகரிப்பொன்றை கோரப்பட்டதாக அவ்விலை அதிகரிப்பு வழங்கப்படவில்லையென உறுதிப்படுத்துகின்றேன். | |
| (ஆ) | கல்தேமுல்ல ஊழியர் ஓய்வறையை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2017 மே 28 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் அவ்வாறு செய்யப் பட்டிருக்கவில்லை.<br>முதலாவது பட்டியலை தீர்வு செய்யும் போது ரூபா 536,274 பெறுமதிக்காக ரூபா 588,489 கொடுப்பனவு செய்யப்பட்டதால் ரூபா 52,215 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப் பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தை இடை நடுவில் நிறுத்தியிருந்ததுடன் ஒப்பந்தக்காரர் உடன் படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஒப்பந்தத்தில் காணப்பட்ட குறைபாடுகளை சீராக்குவதற்கும் நிறுவனத்தினால் கோரப்பட்ட வேறுபாடுகள் இடம்பெற்றமையால் இதனை பூர்த்தி செய்வதில் தாமதமாக இருந்தது. | ஒப்பந்த நிர்வாகம் முறையாக பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |